**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.397/2023**
**Prosecution Witness – PW.1**

| | | |
|---|---|---|
| Name | | திருமதி.ஷீலா |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.07.2026.

(Accused present.)

முதல் விசாரணை–

நான் தற்பொழுது கப்பியறையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது உறவினர் தான். நாங்கள் தற்சமயம் சமாதானம் அகிவிட்டோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது, அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த புகார் ஆ.சா.ஆ.1. போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)

கடந்த 04.10.2020 ம் தேதி ஜெயராஜ் என்பவர் அவருடைய வீட்டில் இருந்து எனது கணவரையும் அவருடைய தம்பி ரஜினி காந்தையும் பார்த்து கெட்ட வார்த்தைகள் பேசி நீங்கள் இன்னும் உயிருடன் தான் இருக்கிறீர்களா, உங்களை கொல்லாமல் விட மாட்டேன் என்று சொல்லி, அதை கேட்ட எனது கணவரும், அவரது தம்பியும், ஜெயராஜ் என்பவருடைய வீட்டிற்கு சென்று ஏன் திட்டுகிறாய் என்று கேட்டதாகவும், உடனே ஜெயராஜ் அவன் வீட்டில் வைத்திருந்த ஆக்கத்தியை எடுத்து வந்து இதோடு செத்து ஒழிங்கடா என்று சொல்லி எனது கணவரை வெட்டியதில் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும், ரஜினிகாந்த் தடுக்க முயன்றபோது அவருக்கு மணிக்கட்டின் கீழும் இடது பக்க தாடை எலும்பிலும் காயம் ஏற்பட்டதாகவும், அதன் பிறகு ஜெயராஜ் கீழே விழுந்ததில் அவன் கையில் இருந்த ஆக்கத்தி பட்டதில், ஜெயராஜ்க்கு

காயம் ஏற்பட்டதாக சொல்லிவிட்டு அதன்பிறகு எனது கணவர் மற்றும் அவருடைய தம்பி ரஜினி காந்த் ஆகியோர்களை மிரட்டியதாக சொல்லிவிட்டு மருத்துவமனையில் சிகிட்சையில் இருந்த விபரங்களையும் கருங்கல் காவல் நிலைய காவலர்கள் விசாரிக்கும் போது சொல்லி விட்டு தற்சமயம் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதால், பெரியவர்கள் முன்னிலையில் சமாதானமாகி கொண்டதால், உண்மைக்கு மாறாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால், சமாதானம் ஆகி விட்டோம்.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.397/2023**
**Prosecution Witness – PW.2**

| | |
|---|---|
| Name | : திரு. சிம்சன் துரை |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.07.2026.

(Accused present.

முதல் விசாரணை–

நான் கப்பியறையில் உள்ள கணியாரம் பொற்று விளையில் வசித்து வருகிறேன். நான் மண்வெட்டும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கு சம்பவந்தமாக போலீஸ் விசாரிக்கவில்லை. நாங்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்த நபர்கள். தற்சமயம் சமாதானமாகி கொண்டோம்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)

கடந்த 04.10.2020 ம் தேதி ஜெயராஜ் என்பவர் அவருடைய வீட்டில் இருந்து என்னையும், என்னுடைய தம்பி ரஜினி காந்தையும் பார்த்து கெட்ட வார்த்தைகள் பேசி நீங்கள் இன்னும் உயிருடன் தான் இருக்கிறீர்களா, உங்களை கொல்லாமல் விட மாட்டேன் என்று சொல்ல, அதை கேட்ட நானும் எனது தம்பியும், ஜெயராஜ் என்பவருடைய வீட்டிற்கு சென்று ஏன் திட்டுகிறாய் என்று கேட்டதாகவும், உடனே ஜெயராஜ் அவன் வீட்டில் வைத்திருந்த ஆக்கத்தியை எடுத்து வந்து இதோடு செத்து ஒழிங்கடா என்று சொல்லி என்னை வெட்டியதில் எனக்கு காயம் ஏற்பட்டதாகவும், ரஜினிகாந்த் தடுக்க முயன்றபோது அவருக்கு மணிக்கட்டின் கீழும், இடது பக்க தாடை எலும்பிலும் காயம் ஏற்பட்டதாகவும், அதன் பிறகு ஜெயராஜ் கீழே விழுந்ததில் அவன் கையில் இருந்த ஆக்கத்தி பட்டதில், ஜெயராஜ்க்கு காயம் ஏற்பட்டதாக சொல்லிவிட்டு அதன்பிறகு என்னையும் என் தம்பி ரஜினி காந்த் ஆகியோர்களை மிரட்டியதாக சொல்லிவிட்டு மருத்துவமனையில்

சிகிட்சையில் இருந்த விபரங்களையும் கருங்கல் காவல் நிலைய காவலர்கள் விசாரிக்கும் போது சொல்லி விட்டு தற்சமயம் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதால், பெரியவர்கள் முன்னிலையில் சமாதானமாகி கொண்டதால், உண்மைக்கு மாறாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால், சமாதானம் ஆகி விட்டோம்.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**